
ஶ்ரீ ரகஸ்யம்!
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

# ஓர் ரகஸியம்!



(1)

# "ஓர் ரகஸியம்!"

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

ஓர் "ஸத்தான!" குழந்தை, ஓர் "ஸத்தான கனவு" (அது கனவல்ல ஓர் உணர்வு)

கண்டும், அதன் மூலம், ஓர் ஸத்தான கேள்வியும் கேட்டிருக்கிறது! இது அன்பர்கள் அனைவர்க்கும், பயன்படும் என, இதை எழுத்தில், திருடன், (கண்ணன்) வாயிலாக தருகிறோம்!

அக்குழந்தையின் கனவு :- ஜடா முடியோடு, கௌபீனதாரியாய், சொல்லால் விளக்க முடியாத மிகப்பழமையானவரை, ஓர் தோற்றமாய், ஓர் "மஹாபுருஷன்" தரிசித்திருக்கிறான்! (இது கனவின் கேள்வி) (என ஓர் கேள்வியும்) அவர் யார்?

அக்குழந்தையின் மற்றோர் கேள்வி :- ஜெய ஸத்குரு தேவா, பாடலில், திருவடித் தாளி, ஸத்குரு தேவா! என பாடும் பாடல், "தாங்களும்" (திருவடித் தாளியாபரவான தாங்களும்) அனுபவித்து, உருகி, பாடுகிறீர்களோ? அதில் எனக்கு வந்த சந்தேகம்! திருவடித்தாளியாபர தாங்களா? அல்லது, வேறு யாரேனும் இருக்கிறார்களா?



உ

௨

ஓர் ஏழை பரதேசி, வைத்தியத்தின் "நீலஸ்" எம் கபட நாடக "ஸூத்ரதாரியான, கண்ணா" பதில் தருகிறேன். உணர்வுடன் சுவைத்து ஒன்றி கவனிக்கவும்!!

பதில்:- குழந்தாய்! நீ கண்டது கனவு அல்ல! உணர்வு நிலையில் கண்ட காட்சியில், வந்த மஹாபுருஷனவன்; இது வரை, "ஆறுமுறை" அதன் அம்சமான, தன்னைத்தானே, தோற்றுவித்துக்கொண்டும், ஓர் "நடஞானியாகும்!!

அவன் ஸத்குருவும் அல்ல! எந்த ஸ்ரீ மஹானும் அல்ல!! அவனே "ஞானிபாபா!" என்பவனாகும்!

பல, கோடி வருஷங்களாயும்/ பலபல, லக்ஷம் வருஷங்களாயும்/ பல பல பல, ஆயிரம் வருஷங்களாயும்/ "நம்மத்தாமே" தோற்றுவித்துக்கொண்டும், பிரம்ம ஞானானுபவ சொரூபமாகும்! அவன் ஒருவனே, "பிரம்மாவின்" சிருஷ்டிக்கும், அப்பால் பட்டவனாகும்! அவன் ஸ்ரீமெய் அன்பர்களின், "ஸ்ரீதிருவடியின் அடியன்.



(௩)

"ஒட்டியிருக்கும்" ஸ்ரீ பாத தூளியாகும்! அவனுக்குத்தான் அடிப் பொடியாகும் அந்தந்தக் காலங்களில், ஸ்ரீ அன்பர்கள் திருவடித் தூளி யென, அழைப்பார்கள். முடிவில் அவன் நாமம், சமாதி ஆகும் வேளையில் "தூளிபாபா"! என விளங்கும் என, தன்னையறிந்த ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்! இது, இது கால பரியந்தம், "பிரம்ம ரகஸ்யமாக" இருந்து வந்தது. அது இப்போது, வெளியாகும் நேரம், வந்து விட்டது போலும்? இந்த ஜெய ஸத்குரு தேவா! திருவடித் தூளி ஸத்குரு தேவா! என்று அவன் அவதாரமான ஒவ்வொரு காலங்களிலும், யாரேனும் சில அணுக்கத் தொண்டர்! வாயிலாக பாடும் "ஜீநீ"! நாமமே உருவாகும். இந்த ஏழை பரதேசி வைத்தியமும் அன்னையே! பாடுகிறது! மெய்யன்பர்கள் அனைவரையும்! உணர்வுடன் கூடியவர்களை மட்டும் "உணர்வுடனும்" உருக்கத்துடனும், ஓர்மையுடனும் பாட கேட்டு, கேட்டு, ஆனந்திக்கிறேன்!

# ஓர் ரகஸ்யம்



(4)

ஓர் நிலையில் அவன் "பிரம்மானந்த" சமுத்திரமாகும்! இந்த நைவைத்தியம், "அந்த ஸ்ரீ திவ்ய" (துளி) ஆகும்! இந்த நைவை பாடுவது "குரு" ஸ்துதியாக, அவனையே பாடுகிறோம்! "சேய்க்கு" வரும் நோய்க்கு, "தாயே" சேய் நோயை மருந்து உண்டு "குணமாக்குவது" போல், இந்த நைவைத்தியமே, "நம்முடைய அன்பர்களுக்காக"/ பிரார்த்தனையும், ஸ்ரீ குரு ஸ்துதியும், ஏற்றுக் கொண்டிருக்கிறோம், என்பதை உங்கள் அனைவரின், பாதம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், "அவனுக்கும்/ இவனுக்கும்"/ இந்த நைவைத்தியத்திற்கும் என்ன தொடர்பு என்பதை, ஓர் சிறிய கதை மூலம், விளக்குகிறேன். கருத்துடன் உணர்வீர்!

துவாரகையில், துவாரகாதீசன் என்ற நிலையில், எம்பிரான் "கண்ணன்"/ அரசாட்சி செய்து வருகிறான். ஓர் நாள், கண்ணன், அரியாசனத்தில் இருக்கும் போது, நம் காண்டீபனும், உடன் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். அதுசமயம், ஓர் "பிராமணன்" அச்சபையில், பிரவேசிக்கிறான்.



உ



பிராமணன்:- ஹே கமலக்கண்ணா! ஹே பரமாத்மா! ஹே பிரபோ! இந்த ஏழை பார்ப்பனனின், வேதனை தாங்கள் அறியாததா? தாங்கள், கருணா மூர்த்தியாயிற்றே! தாங்கள் ஆட்சியில், இப்படியும், முறைகேடான நிகழ்வு நடைபெறலாமா?

எம் அழுகுரல் தாங்கள் செவியில், எட்டவில்லையா? இதுகாலபரியந்தம், "ஏழு ஆண்" குழந்தைகளை, பறிகொடுத்துவிட்டோம். ஒவ்வொரு முறையும், யாம் தாங்களிடம் "முறையிடும்போது" ஒரு பதிலும் பேசாமலும். ஆறுதல் வார்த்தையும் கூறாமலும். "மௌனமாகவே" சிரிக்கிறீர்கள்! அந்த ஏழு குழந்தைகளும், பிறந்து, இரண்டொரு நிமிஷங்கள் தான் இருந்திருக்கிறது. பிராணனுடன் இரு . அடுத்து "வீல்" என, ஓர் "அலறல்" அலறுகிறது! அத்துடன், அதன் பிராணனும், போய்விடுகிறது. இம்முறையும், எம் மனைவி, கருத்தரித்திருக்கிறாள்! இது எட்டாவதாகும்! இக்குழந்தையையாவது, எமக்கு ரக்ஷித்து, எமக்கு அந்திம கடன், செய்யும் நிலைக்கு, அருள்பாலிக்கக்கூடாதா? எம்குறையை, தாங்களிடம் தானே முறையிட முடியும்? ஹே கருணாசாகரா! இந்த ஏழைபிராமணன் மீது, கருணை காட்டலாகாதா? என கதறி அழுதவண்ணம், முறையிட, எம்கண்ணனும், ஒன்றும் பேசாமல், ஆறுதலும் கூறாமல், மௌனமாய் புன்னகைத்தான். சபையோர் அனைவரும், ஆச்சரியம் அடைந்தனர்.



பின் கண்ணன் ஓர் வார்த்தை சொன்னான். "உ" (6)

கண்ணன்:- குறும் சிரிப்பாக சிரித்துக் கொண்டே, "ஐயா/எல்லாம்" "நன்மையாகவே" நடைபெறுகிறது. கவலையை விடும்! பயத்தை விடும்! நடப்பதை நலமாகவே ஏற்றுக் கொள்ளும்!

பிராமணன்:- என்ன கண்ணா சொல்கிறீர்கள்? பெற்றெடுத்த குழந்தைகள், பறிகொடுப்பதை நலம் என ஏற்கச் சொல்கிறீர்களா? (அங்கு காண்டீபன் குறுக்கிட்டான்)

காண்டீபன்:- ஹே பிராமணோத்தமரே! இக்கண்ணன், ஓர் கபட நாடக சூத்திரதாரி! இவனைப்பற்றி, எவராலும் புரிந்து கொள்ள முடியாது! யாம் ஒருவனே, இவனைப் பற்றி சற்று உணர்வோம். தாங்கள் கவலைப்படாமல் பயப்படாமல் வீட்டிற்கு செல்லுங்கள். உம் மனைவி பிரசவத்தன்று, யாம் அவசியம் வருவோம். உம் மனைவியையும், இனி பிறக்கப்போகும் குழந்தையையும், "யாம் ரக்ஷிக்கிறோம்"! அப்படி காக்க முடியவில்லையாயின், "யாம் அக்னி" பிரவேசம் செய்வோம்! இது "ஸத்தியம்" என பிரமாணம் செய்தான் நம் பார்த்திபன். பின் எம் கண்ணனை நோக்கி, சொன்னதாவது:- ஹே கமலநயனா! எம்முள் இருந்து பேசியதும் நீயே! இவ்வார்த்தை நடத்துவாயோ? நிறுத்துவாயோ? நடந்தாலும் நீயே!



நடக்கவில்லையானாலும் நீயே! யாம் ஓர் பெருமையே! என்று சவாப்பணத்துடன் கூடிய, வீர வசனம் கூறிவிட்டு சென்றுவிட்டான்

பின் அந்த அந்தணனின் மனைவியின் பிரசவ காலத்தில் வந்து சேர்ந்தான் இன்று அரவு பிரசவகாலம்,

முதலில், அந்த அந்தணன் குடிசையை சுற்றி ஓர்பாணம் தொடுத்து "சரக்கூடம்" (காற்று கூட உள்ளே போக முடியாத, அளவுக்கு பாணக்கோட்டை) கட்டினான்! பின்தம் காண்டீபத்தில், ஓர் திவ்யாஸ்திரத்தோடு வரும் "காலன்" எதிர்க்கத் தயாரானான்!

மணி சரியாக 12 ஆனது. ஓர் ஆண்குழந்தையும், சுக பிரசவமாக பிறந்தது! முன்பிறந்த ஒன்பது குழந்தைகளைப் போல், பிறந்த "இரண்டாவது" நிமிஷங்களில் "வீல், வீல்!" எனக் கத்தியது. முன் குழந்தைகளைப் போலவே இக்குழந்தையும், பரமபதம் சென்று விட்டது! காலதேவனே, வேறு எந்த தேவனோ, எவரும் வரவில்லை! அக்குழந்தையின் உயிரை, எவரும் கவர்ந்து செல்லவுமில்லை!



உ



நம் காண்டீபன் திகைத்தான். அவ்
வேதியரிடம், எதுவும் பேசாமல், தானே
ஓர், அக்கினி குண்டம் நிறுவினான்.
அதில் குதிக்க, ஆயத்தமானான் நம்
காண்டீபன். காண்டீபன் கடைசியாக,
ஓர் வார்த்தையை மட்டும் சொன்னான்

"ஹேபிரபோ! வாங்கு நாவறிய
அந்த ஏழையை ற்றுக்கொள்!"

அந்த க்ஷணம், எம் கண்ணன் அங்கு தோன்றினான்! அவன் காண்டீபனின் கரத்தை தம் அபய கரத்தால் பற்றினான்!

ஹே பார்த்தா! அன்று சபையில் வைத்து, எல்லாம் நன்மையே நடைபெறுகிறது என்றும், எல்லாம் நன்மையே என்றும் சொன்னேனல்லவா? அந்த நவமாகிய "நன்மையை" நாம் இருவரும் தரிசித்து வருவோம், எனக்கூறி, கண்ணனும், காண்டீபனும், ஓர் ரதத்தில் ஆரோகணித்து ஆகாயமார்க்கமாக, சென்றார்கள். எவ்வளவு காலம் சென்றார்களோ? எங்கு சென்றார்களோ? யாம் அறியோம். ஓர் "அனந்தகோடிசூர்ய பிரகாசம்" உள்ள ஓர், அமைதியான ஆனந்தமான ஓர் இடத்தை அடைந்தனர். சிறிது தூரத்தில், ரதத்தை

உ



விட்டு இறங்கி, பாத சாரியாகவே, நடந்து சென்றார்கள். அந்த ஒளிமயமான இடத்தில், "ஒளிபொருந்திய" மகா மேருபர்வதம் போல், "விராட்சொரூபத்தில்" ஓர் "திவ்யசொரூபம் சயன நிலையில்" பேரானந்தக் களிப்பில், மூழ்கிய விண்ணைக், கண்ணனையும், காண்பவனையும், "வரவேண்டும் வரவேண்டும்!" உங்கள் வரவு "நல்வரவாகுக" என, வரவேற்ற நிலையில், கனிவான கருணை மொழியில் அழைத்தவாறிருந்தது. அந்த பேரானந்த சொரூபம்!

அங்கு அந்த விராட் சொரூபத்தையும் கண்ணன் காண்பவனையும் நோக்கினர், அந்த இடத்தில்???
மகாமேரு மலையும், அதில் உள்ள ஓர் [illegible]ாங்கமும் எனக் கண்டனர்!

அனைத்து "ஸ்ரீமஹாங்கமாங்களும்" நான்கு திசையிலும், விண்ணிலும், சூழ்ந்திய விண்ணைம், "ஜெயவிஜயீபவா!" என வாழ்த்துக் கூறி, வரவேற்றனர்.



உ

(10)

இப்போது அந்த, விராட் சொருபத்தின் "திருவடியின் கீழ்" அந்த பிரம்ம ஞானத்தமனின், குழந்தைகளான, "எண்மரும்" வரிசையாக அமர்ந்த நிலையில், வேதபாராயணம் செய்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், அந்த "விராட்சொரூபமானது" திருவாய் மலர்ந்தருளியதாவது???

"ஹே எம் ஆனந்த குழந்தைகளான, "நான்! (ஆத்மா) & (பரமாத்மா) நாராயண்"! உங்களுக்கு, மங்களம் உண்டாவதாக!

எம் அம்சத்தின், ஓர் அங்கமாக திகழும் நீவிர் இருவரும், பூலோகத்தில், "அரிய பெரிய" காரியங்களை, வெகு அதிசயமாக, செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது "யாவரும்" அறிந்ததே! ஆனாலும் இப்பரம பதத்திலுள்ள, அனைவரும், "உங்கள் இருவரையும்" தரிசிக்க, ஆவல் கொண்டனர். இவர்கள் அனைவரின் "கணக்கு" முடியும் முன்பு, இவர்கள் அங்கு வந்து தாங்கள்



11

திவ்விய ↑ "தர்ஸணம்" செய்வதென்பது, இயலாத காரியமே! ஆகவே, உங்கள் இருவரையும், இங்கு வரவழைத்து, இதுவே சிறந்த "உபாயமாக" பட்டது!

ஆகவே, அவ்வேதியனின், ஒவ்வொரு குழந்தையையும் இங்கு கொண்டுவர "யோக மாயா" பயன் படுத்தப்பட்டது!

நீங்கள் இருவரும் இங்கு வந்ததோ ஓர் "காரணம்"! அதற்கு இக்குழந்தைகள், பயன் படுத்தப்பட்டதோ ஓர் "காரியம்"! காரியம் செயல்படாமல் காரணம் உரை முடியாது!

இனி, இக்குழந்தைகளை, இட்டுச் சென்று, அவர்கள் பெற்றோரிடம், ஒப்படைத்து விடலாமென, அருள் முகம் மொழிந்து விட்டு, அது மௌனமானது!

இச்சம்பவத்திலிருந்து நீங்கள் உணர்வதாவது? விராட் சொரூபமானது "பிரம்மானந்த" சமுத்திரமாகும்!

எம் கண்ணன், அச்சமுத்திரத்தின், "ஓர் குடம்" ஜீவமாகும்!

எம் காண்டீபன், அச்சமுத்திரத்தின், "ஓர் குவளை" ஜீவமாகும்!

அது போல ஆனந்தமோ, பிரம்மானந்தமோ, "அந்த ஔஷதம்"! காலாந்த இதைப் போலவே,



உ

(12)

அளவில் பேதம் உண்டே தவிர, ஜலத்தில் பேதம் இல்லை!

திடஞானியான, அம் "மஹா புருஷ ஜீவன்"! கரிய, நெடிதுயர்ந்த, சொரூபமாகும்!

"அவன் காரண சொரூபமாகும்! இவ்வேழை, ஓர் "காரிய" சொரூபமாகும்!

"அவன் மேகம், இது ஐயங்கிற

இந்த ரகஸியம், இன்னமும் "சிறது" று!

"காலத்தில்" உறைந்துகிடக்கும் "மெய் அன்பர்கள் மட்டும் உணர்வர்!

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

ஏனையோருக்கு, "புராணக்" பொய்க் "கதையாய்" படித்து மகிழ்வர்!

எது எப்படியாயினும், இருப்பது ஒன்றே! அதுயாமே! அது நீங்களே! என இவ்விதழை ஆர்க்கி செய்கிறோம்!

பாபா.




Abode of Love

You Are Everything!